District Munsif Court, Palani.
I.A.No.1/23 in O.S.85/2023

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : செல்வி. S.அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 ஆம் நாள், திங்கள்கிழமை**

**இ.ம.எண்.1/2023**

**இன்**

**அ.வ.எண்.85/2023**

A. மாமூண்டி

(வாதி தனக்காகவும், பழனி வட்டம் பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகுமாமூண்டி கோவில் 27 பங்காளி குடும்பங்களுக்கு பாத்தியப்பட்ட பெரியகுடும்பத்தார் என்ற முறையில்)

....மனுதாரர்/வாதி

// எதிர் //

1. T.முருகன்
2. M.பாண்டியன்
3. M.சுப்பிரமணி
4. M. பெரியசாமி
5. P. குரு

....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் **திரு.M.மணிக்கண்ணன், B.A.,B.L.,** ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் **திரு.P.மதியழகன், B.Sc.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இறுதி விசாரணைக்காக 12.06.2025 ஆம் தேதி வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

பழனி வட்டம், பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு மாமூண்டி திருக்கோவிலுக்கு உரிமைப்பட்ட 27 பங்காளிகளின் பெரிய குடும்பத்தார் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்ய தக்க அனுமதி வழங்க உத்திரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறை சட்டம் **கட்டளை 1 விதி 8 பிரிவு 151ன்** படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்:-**

2.1. மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் வாதி என்றும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரர் தனக்கும் தனது பங்காளிகளான பழனி வட்டம், பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில் இருக்கும் மாமூண்டி திருக்கோவிலுக்கு உரிமைப்பட்ட 27 பங்காளிகளின் பெரியகுடும்பத்தார் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரரது குலதெய்வகோவிலானது பழனி வட்டம், பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில்

அமைந்துள்ளது என்றும், அதில் நாங்களும் தங்களது முன்னோர்களும் காலங்காலமாக வழிபட்டு வரும் குலதெய்வ கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடத்தி தொடர்ந்து வழிபாடு செய்திருந்து வருகிறோம் என்றும், இப்பால் தங்களது குலதெய்வ கோவிலின் சக்தி, மகத்துவம் மற்றும் புனிதமும் ஆகியவைகள் கெட்டுவிடக்கூடாது என்று நல்லெண்ணத்தோடு கோவிலைச் சுற்றி தங்களுடைய பட்டா அளவுகளுக்கு பாத்தியப்பட்ட குறிப்பிட்ட அத்துமாலுக்குள் காம்பவுண்டு சுவர் கட்டுவதற்கு கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு பேச்சுவார்த்தை ஏற்பட்டு அதனை தொடர்ந்து, கட்டுமானப்பணிகளை தொடருவதற்கு நடவடிக்கை எடுத்துவந்தபோது இந்தப்பிரதிவாதிகள் வேண்டுமென்றே எங்களது வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாமல் கோவில் காம்பவுண்டு சுவர் கட்டவிடாமல் ஆட்சேபணை செய்து வருவதோடு மட்டுமல்லாமல் அடிப்படை ஆதாரமில்லாமல் தங்களை கட்டுமான பணிகளை செய்யவிடாமல் தடுத்து நிறுத்தி இடையூறு செய்து வருகிறார்கள் என்றும், தாங்களும் தெய்வகாரியங்களுக்கு குறுக்கே எந்தவித ஆட்சேபணையும் செய்யாதீர்கள் அவ்வாறு செய்தால் அது தங்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்திவிடும் என்றும், நேரடியாகவும், பொதுமனிதர்கள் மூலமும் எடுத்துரைத்து எதிர்மனுதாரர்கள் தங்களது சட்டத்திற்கு புறம்பான செயல்களில் இருந்து பின்வாங்காமல் இருந்துவருவதால் எங்களால் பிராது சொத்தில் உள்ள கோவிலுக்கு சுற்றுச்சுவர் அமைக்கமுடியாமல் இருந்து வருகிறது என்றும், அதனால் மனுதாரர் பழனி வட்டம், பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள மாமூண்டி திருக்கோவிலுக்கு உரிமைப்பட்ட 27 பங்காளி குடும்பத்தார்களின்

பெரியகுடும்பத்தார் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்ய தக்க அனுமதி வழங்க வேண்டியிருக்கிறது என்றும், அல்லாதபட்சத்தில் தனக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்கள் /வாதிகள் தரப்பு எதிருரையின் சுருக்கம் :–**

3.1. மனுதாரரின் மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய்யும், பிரட்டும், மோசடியுமானவைகள் ஆகும் என்றும், இந்த எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் இந்த எதிர்மனுதாரர்களால் மறுக்கப்படுகிறது என்றும், அவைகளை மனுதாரரே உரிய ஆவணச் சான்றுகள் மற்றும் சாட்சிகள் வாயிலாக நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார் என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சேர்ந்து வழக்கு நத்தம் புறம்போக்கு இடத்தில் ஊமக்காளி கோவில் மற்றும் மாமூண்டி கோவில் ஆகியவற்றை 100 வருடங்களுக்கு முன்பிருந்தே வழிபட்டு வந்துள்ளார்கள் என்றும், மேற்படி இரண்டு கோவில்கள் மறைத்தும் மற்றும் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்துடன் மேற்படி மனுவை இந்த மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2. அதனைத் தொடர்ந்து, மேற்படி வழக்கு இடத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ஊமக்காளி கோவில் இருந்ததை மூடி மறைத்தும் சமூகம் நீதிமன்றத்தை தவறாக வழி நடத்தியும், உண்மைக்கு மாறான பொய்யான சங்கதிகள் மூலம் அதாவது வழக்கு சொத்தில் மாமூண்டி கோவில் மட்டுமே இருப்பது போன்றும் அதை சுற்றி சுற்றுச் சுவர் அமைக்க வேண்டியும் மேற்படி மாமூண்டி கோவில்

புனிதம் கெட்டு விடும் என்ற பொய்யான காரணத்தை முன் வைத்து சுற்றுச் சுவர் அமைக்க வேண்டும் என்று பொய்யாகவும் சட்டத்திற்கு புறம்பாகவும் கூறி இந்த மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கதாகும் என்றும், மனு இடத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதும் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தொடர்ந்து வழிபட்டுக் கொண்டுள்ள ஊமக்காளி கோவில் இருக்கிற காரணத்தால் மேற்படி மனுதாரர்/வாதி மனுவில் கோரியுள்ளபடி சுற்றுச்சுவர் அமைப்பதோ, மனுக்கோவில் தனிப்பட்ட மாமூண்டி பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டதோ அல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் கூட்டாக சேர்ந்த கோவில் இடம் என்பதால் மேற்படி மனு இடத்தில் சுற்றுச் சுவார் அமைப்பது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் கடுமையாக ஆட்சேபிக்கப்படுகிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் எழுகின்ற பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>6. தீர்வு:</u>**

6.1. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் மனுதாரர், தனக்கும் தனது பங்காளிகளான பழனி வட்டம், பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில் இருக்கும் மாமூண்டி திருக்கோவிலுக்கு உரிமைப்பட்ட 27 பங்காளிகளின்

பெரியகுடும்பத்தார் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரரது குலதெய்வகோவிலானது பழனி வட்டம், பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், அதில் நாங்களும் தங்களது முன்னோர்களும் காலங்காலமாக வழிபட்டு வரும் குலதெய்வ கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடத்தி தொடர்ந்து வழிபாடு செய்திருந்து வருகிறோம் என்றும், இப்பால் தங்களது குலதெய்வ கோவிலின் சக்தி, மகத்துவம் மற்றும் புனிதமும் ஆகியவைகள் கெட்டுவிடக்கூடாது என்று நல்லெண்ணத்தோடு கோவிலைச் சுற்றி தங்களுடைய பட்டா அளவுகளுக்கு பாத்தியப்பட்ட குறிப்பிட்ட அத்துமாலுக்குள் காம்பவுண்டு சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துவந்தபோது இந்தப்பிரதிவாதிகள்/ எதிர்மனுதாரர்கள் வேண்டுமென்றே தங்களது வளர்ச்சியை பொறுத்துக்கொள்ள முடியாமல் கோவில் காம்பவுண்டு சுவர் கட்டவிடாமல் ஆட்சேபணை செய்து வருவதோடு மட்டுமல்லாமல் அடிப்படை ஆதாரமில்லாமல் தங்களை கட்டுமான பணிகளை செய்யவிடாமல் தடுத்து நிறுத்தி இடையூறு செய்து வருகிறார்கள் என்றும், அதனால் மனுதாரர் பழனி வட்டம், பெத்தநாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள மாமூண்டி திருக்கோவிலுக்கு உரிமைப்பட்ட 27 பங்காளி குடும்பத்தார்களின் பெரியகுடும்பத்தார் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்ய தக்க அனுமதி வழங்கக் கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்று வாதிடப்பட்டது.

6.2. எதிர்மனுதாரர்கள் தரப்பில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சேர்ந்து வழக்கு நத்தம் புறம்போக்கு இடத்தில் ஊமக்காளி கோவில் மற்றும் மாமூண்டி கோவில் ஆகியவற்றை 100 வருடங்களுக்கு முன்பிருந்தே

வழிபட்டு வந்துள்ளார்கள் என்றும், மேற்படி இரண்டு கோவில்கள் மறைத்தும் மற்றும் ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்துடன் மேற்படி மனுவை இந்த மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு சொத்தில் மாமூண்டி கோவில் மட்டுமே இருப்பது போன்றும் அதை சுற்றி சுற்றுச் சுவர் அமைக்க வேண்டியும் மேற்படி மாமூண்டி கோவில் புனிதம் கெட்டு விடும் என்ற பொய்யான காரணத்தை முன் வைத்து சுற்றுச் சுவர் அமைக்க வேண்டும் என்று பொய்யாகவும் சட்டத்திற்கு புறம்பாகவும் கூறி இந்த மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மனுதாரர்/வாதி மனுவில் கோரியுள்ளபடி சுற்றுச்சுவர் அமைப்பதோ, மனுக்கோவில் தனிப்பட்ட மாமூண்டி பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டதோ அல்ல என்றும், இந்த எதிர்மனுதாரர்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் கூட்டாக சேர்ந்த கோவில் இடம் என்பதால் மேற்படி மனு இடத்தில் சுற்றுச் சுவார் அமைப்பது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் கடுமையாக ஆட்சேபிக்கப்படுகிறது என்றும் வாதிடப்பட்டது.

6.3. அசல் வழக்கானது வழக்கு சொத்தில் அமைந்துள்ள வாதிக்கும் அவருடன் சேர்ந்த 27 பங்காளி குடும்பங்களுக்கும் பாத்தியப்பட்ட மாமூண்டி திருக்கோவிலானது அருள்மிகு மாமூண்டி திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் அதன் தொடர்பரிகாரமாக வழக்குச் சொத்தில் அமைந்துள்ள அருள்மிகு மாமூண்டி திருக்கோவிலுக்கு சுற்றுச் சுவர் அமைப்பதையும் அதன் கட்டுமான பணிகளையும் பிரதிவாதிகளோ அவரது வகை ஆட்களோ எவ்வித தடையும் இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக,

**" பிரதிநிதித்துவ வழக்கு"** என்பது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் சார்பாகவும் வழக்கில் ஒரே மாதிரியான ஆர்வமுள்ள மற்றவர்களின் சார்பாகவும் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அல்லது நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தாக்கல் செய்யும் வழக்காகும். உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 8 ன் கீழ் தாக்கல் செய்யும் வழக்கின் நோக்கம் ஒரு வழக்கில் ஆர்வமுள்ள அனைத்து நபர்களும் அதில் கட்சிக்காரர்களாக சேர வேண்டும். எனவே, அதில் சம்பந்தப்பட்ட சங்கதிகளுக்கு இறுதியாக தீர்ப்பளிக்கப்படலாம். மேலும், அதே சங்கதிகள் குறித்து புதிய வழக்குகளை தவிர்க்கலாம்.

6.4. வழக்குச் சொத்தான அருள்மிகு மாமூண்டி திருக்கோவிலுக்கு உரிமைப்பட்ட 27 பங்காளிகளின் பெரிய குடும்பத்தார் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்ய தக்க அனுமதி வழங்க உத்திரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வழக்குச் சொத்தானது வாதிக்கும் அவருடன் சேர்ந்த 27 பங்காளி குடும்பத்தார்களுக்கும் பாத்தியப்பட்ட சொத்தா ? அல்லது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தா? என்பதை அசல் வழக்கில் உரிய விசாரணைக்குப் பிறகே முடிவு செய்ய இயலும். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில், வழக்குச் சொத்தான அருள்மிகு மாமூண்டி திருக்கோவிலுக்கு உரிமைப்பட்ட 27 பங்காளிகளின் பெரிய குடும்பத்தார் என்ற முறையில் அசல் வழக்கு தாக்கல் செய்ய இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

1. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து கணினியில் நேரடியாக பிழை நீக்கம் செய்யப்பட்டு 30.06.205 ஆம் தேதியாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-சு.அபூர்வா,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**

**<u>மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:-</u>** இல்லை.

**<u>மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி:-</u>** இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**இல்லை.

**ஒம்/-சு.அபூர்வா,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**